## கல்வியிற் சிறந்த பெண்கள்

### சிறுவினாக்கள்

1.சங்க காலப் பெண்பாற் புலவர்களின் பெயர்களை எழுதுக.

- ஔவையார்
- ஒக்கூர் மாசாத்தியார்
- ஆதிமந்தியார்
- வெண்ணிக் குயத்தியார்
- பொன்முடியார்
- அள்ளூர் நன்முல்லையார்
- நக்கண்ணையார்
- காக்கைப்பாடினியார்
- வெள்ளிவீதியார்
- காவற்பெண்டு
- நப்பசலையார்

2.மருத்துவர் முத்துலட்சுமியின் சாதனைகளைக் குறிப்பிடுக.

- முத்துலட்சுமி, தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர்.
- இந்தியப் பெண்கள் சங்கத்தின் முதல் தலைவர்.
- சென்னை மாநகராட்சியின் முதல் துணை மேயர்.
- சட்ட மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண்மணி.
- தேவதாசிமுறை ஒழிப்புச் சட்டம், இருதார தடைச்சட்டம், பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கும் சட்டம், குழந்தைத் திருமணத் தடைச்சட்டம் ஆகியவை நிறைவேறக் காரணமாக இருந்தவர்.
- அடையாற்றில் 1930 இல் அவ்வை இல்லம், 1952 இல் புற்றுநோய் மருத்துவமனை ஆகியவற்றை நிறுவியவர்.

3.மூவலூர் இராமாமிர்தம் அவர்களின் தொண்டினை விவரி.

- தமிழகத்தின் சமூகச் சீர்திருத்தவாதிகளுள் ஒருவர்.
- எழுத்தாளர், திராவிட இயக்க அரசியல் செயல்பாட்டாளர், தேவதாசி ஒழிப்புச் சட்டம் நிறைவேறத் துணை நின்றவர்.
- தமிழக அரசு எட்டாம் வகுப்பு வரை படித்த இளம் பெண்களுக்கான திருமண உதவித் தொகையை இவரின் பெயரில் வழங்கி வருகிறது.
- சென்னை மாகாணத்தில் தேவதாசி முறையை ஒழிக்க முத்துலட்சுமி அம்மையாருடன் சேர்ந்து பணியாற்றியவர்.

4.பெண்கல்வி மேம்பாட்டிற்கு அரசு எடுத்த நடவடிக்கைகள் யாவை?

- 1882 – இல் ஹண்டர் குழு முதன் முதலில் பெண்கல்விக்குப் பரிந்துரை செய்தது.
- பெண்கல்வி பயில பல உயர்கல்வி நிறுவனங்களை அரசு உருவாக்கியது.
- பூலே இணையர் முதன் முதலாக பெண்களுக்கான பள்ளியைத் தொடங்கினார்கள்.
- 1964-ஆம் ஆண்டு கோத்தாரிக் கல்விக்குழு தன்பரிந்துரையில் அனைத்து நிலையிலும் மகளிர் கல்வியை வலியுறுத்தியது, விடுதலைக்குப் பின் மத்திய அரசு பெண்கள் பள்ளிக்கூடங்களைத் திறந்தது.

5.நீலாம்பிகை அம்மையாரின் தமிழ்ப்பணி குறித்த சிறப்பம்சங்களை எழுதுக.

- நீலாம்பிகை அம்மையார் மிகச் சிறந்த தமிழறிஞர், மறைமலை அடிகளின் மகளாவார்.
- தந்தையைப் போலவே தனித்தமிழ்ப் பற்று உடையவர்.
- இவரது தனித்தமிழ்க் கட்டுரை, வடசொல் தமிழ் அகரவரிசை, முப்பெண்மணிகள் வரலாறு, பட்டினத்தார் பாராட்டிய மூவர் ஆகிய நூல்கள் தனித்தமிழில் எழுத விரும்புவோர்க்கு மிகவும் பயனுள்ளனவாக விளங்குகின்றன.

6.இராஜேஸ்வரி அம்மையார் குறித்து எழுதுக.

- தமிழ், இலக்கியம், அறிவியல் ஆகிய துறைகளில் சிறந்து விளங்கியவர்,
- திருமந்திரம், தொல்காப்பியம், கைவல்யம் போன்ற நூல்களில் உள்ள அறிவியல் உண்மைகள் குறித்துச் சொற்பொழிவு ஆற்றியுள்ளார்.
- இராணிமேரி கல்லூரியில் அறிவியல் பேராசிரியராகப் பணியாற்றினார்.
- சூரியன், பரமாணுப் புராணம் போன்ற அறிவியல் நூல்களை எழுதியுள்ளார்.

7. பெண்கல்வி ஊக்குவிப்புத் திட்டங்கள் குறித்து எழுதுக.

- ஈ.வே.ரா. நாகம்மை இலவசக் கல்வி உதவித் திட்டம் மேற்படிப்பிற்கு உதவி வழங்கப்படுகிறது.
- சிவகாமி அம்மையார் கல்வி உதவித்திட்டம் – கல்வி திருமண உதவித்தொகை ஆகியவற்றுக்காக வழங்கப்படுகிறது. 1964 – ஆம் ஆண்டு கோத்தாரிக் கல்விக் குழு தன் பரிந்துரையில் அனைத்து நிலையிலும் மகளிர் கல்வியை வலியுறுத்தியது.
- பெண் முன்னேற்றத்தின் தடைக்கல்லாய் இருப்பது குழந்தைத் திருமணம். எனவே அதைத் தடுக்க 1929 -ஆம் ஆண்டு சாரதா சட்டம் கொண்டு வரப்பட்டது,

8. பெண்கள் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டோரின் பணிகளை விவரி.

பண்டித ரமாபாய்

- சமூகத் தன்னார்வலர்
- தடைகளை மீறிக் கல்வி கற்றுப் பண்டிதராகியவர்.
- பெண்களின் உயர்வுக்குத் துணை நின்றவர்.

ஐடாஸ் சோபியா ஸ்கட்டர்

- பெண்கள் மருத்துவராவதை மருத்துவ உலகமே விரும்பாத காலத்தில், தமிழகத்திற்கு வந்து, மருத்துவராகி வேலூரில் இலவச மருத்துவம் அளித்தவர்.

சாவித்திரிபாய் பூலே

- 1848 இல் பெண்களுக்கென தொடங்கப்பட்ட பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றியவர். இவரே நாட்டின் முதல் பெண் ஆசிரியர்.

மலாலா

- பாகிஸ்தானில் பெண் கல்வி வேண்டுமெனப் போராட்டக் களத்தில் இறங்கியபோது மலாலாவின் வயது 12. இவரின் செயலைப் பாராட்டி நோபல் பரிசு வழங்கப்பட்டது.